# இந்திய உயர் ஸ்தானிகராலயம்
# கொழும்பு

************

## <u>ஊடக அறிக்கை</u>

## லடாக் மற்றும் ஜம்மு & காஷ்மீர்: ஒரு வருடத்தில் முன்னொருபோதுமில்லாத அபிவிருத்தி

நேஹா சிங், இந்திய உயர் ஸ்தானிகராலயத்தின் பேச்சாளர்

லடாக் மற்றும் ஜம்மு & காஷ்மீர் யூனியன் பிரதேசங்களுக்கு கடந்த ஆண்டு மிக முக்கியமான பயணத்தினை கொண்டதாக அமைந்தது. ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தை மறுசீரமைக்க பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை மூலம் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்டதும் இந்தியாவின் 1.3 பில்லியன் மக்கள் எடுத்த முக்கியமானதுமான முடிவானது, ஏழு தசாப்தங்களாக வெளித்தரப்பினால் வன்முறைக்கு ஆளான மக்களுக்கு வளர்ச்சி மற்றும் ஆட்சியை வழங்குவதற்கான அடிப்படை நோக்கமாக அமைந்தது.

இந்த விடயத்தை மிகவும் சுருக்கமாக கூறுவதாயின், 1948 ஆம் ஆண்டில் இந்தியாவுடன் சுயமாக இணைந்துகொண்ட ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தை தேசிய நீரோட்டத்திலிருந்து ஒதுக்கி வைக்கும் இந்திய அரசியலமைப்பின் தொன்மையான மற்றும் ஒத்திசைவான விதிகளை செயலற்றதாக மாற்ற இந்திய பாராளுமன்றம் 2019 ஆகஸ்ட் 5 ஆம் திகதி முடிவு செய்தது. அதே விதிகள் சுயசார்பு அரசியல் மற்றும் முன்னுரிமை ஆகியவற்றின் காரணமாக மாநில மக்களின் அபிவிருத்திக்கான அபிலாஷைகளை ஒரு சிலரால் மறைக்க அனுமதித்தன. ஜம்மு-காஷ்மீர் மாநிலம் லடாக் மற்றும் ஜம்மு & காஷ்மீர் ஆகிய இரண்டு யூனியன் பிரதேசங்களாக மறுசீரமைக்கப்பட்டது, அவற்றின் நிர்வாகம் இந்திய அரசின் நேரடி பொறுப்பின் கீழ் மாற்றப்பட்டது. இது முற்றிலும் இந்திய அரசினால் எடுக்கப்பட்ட உள்ளக முடிவு. இதனால் வெளிப்புற எல்லைகள் எதுவும் மாற்றப்படவில்லை, மாற்றப்படும் நோக்கத்துடன் மேற்கொள்ளப்படவும் இல்லை.

முன்னணி பௌத்த ஆன்மீக மையமாகவும், உலகளவில் பிரபலமான சுற்றுலாத் தலமாகவும் புகழ்பெற்ற லடாக், யூனியன் பிரதேசமாக உருவாக்கப்பட்டமை இலங்கை உட்பட பல நாடுகளால் உடனடியாக

வரவேற்கப்பட்டது. லடாக்கில் பௌத்த ஆய்வுகள் மையத்துடன் முதலாவது மத்திய பல்கலைக்கழகத்தை நிறுவும் திட்டத்திற்கு சமீபத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டது. லடாக் மற்றும் ஜம்மு & காஷ்மீரின் வளர்ச்சி மற்றும் ஆட்சியில் ஏற்பட்டுள்ள மகத்தான சாதனைகள் இந்தியாவின் இமயமலையின் ஒருங்கிணைந்த மற்றும் அழிக்க முடியாத பகுதிகளின் பண்புகளுக்கு பொருந்துகின்றன.

ஜம்மு-காஷ்மீரின் நிலத்தடி யதார்த்தங்களைப் பற்றிய ஒரு  மதிப்பீடு, பழைய காலத்திலிருந்து வெளியேறுவதனை நியாயப்படுத்துவதுடன் மட்டுமல்லாமல், மிகவும் அவசியமானது என்பதையும் காட்டுகிறது. இந்திய ஜனநாயகத்தின் தைரியமான இந்த முடிவால்  70 ஆண்டுகளுக்கு முன்னர் காலனித்துவ கரங்கள் தமது பிடிகளை தளர்த்திய காலப்பகுதியின் பின்னர் இந்தியாவின் வடபகுதியிலுள்ள பெரும்பாலான பிராந்தியங்களின் உண்மையான உள்ளீடுகள் முதற்தடவையாக மனித செயற்பாடுகளின் ஒவ்வொரு கோளத்திலும் முன்னொருப்போதுமில்லாத முன்னேற்றத்தினை காணவிளைகின்றன.

பிராந்தியத்தின் பொருளாதாரத்தின் விரைவான வளர்ச்சி மற்றும் பொது மக்களின் வாழ்க்கைத் தரத்தில் முன்னேற்றம் ஆகியவை கடந்த ஆண்டின் மிக முக்கியமான சாதனைகளில் ஒன்றாகும். ஜம்மு-காஷ்மீர் யூனியன் பிரதேச அரசு, பூகோள சர்வதேச மாநாட்டுக்கு முன்னரான மாநாடு ஒன்றை ஏற்பாடு செய்ததுடன்  இங்கு கொள்கை மற்றும் ஒழுங்குமுறை கட்டமைப்பு மற்றும் 14 மையப்படுத்தப்பட்ட துறைகளில் முதலீட்டு வாய்ப்புக்கள் குறித்து சுட்டிக்காட்டப்பட்டன. இதன் விளைவாகவும்  இந்தியா முழுவதும் ஏற்பாடு செய்யப்பட்ட வீதி நிகழ்ச்சிகளின் உதவியுடனும், 13,600 கோடி இந்திய ரூபா (சுமார் 1.9 பில்லியன் அமெரிக்க டொலர்) மதிப்புள்ள 170 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் இறுதி செய்யப்பட்டன.

மற்றொரு எடுத்துக்காட்டாக, காஷ்மீரிலுள்ள ஏழை அப்பிள் விவசாயிகளை இலக்கு வைத்து இந்தியாவின் எல்லைகள் முழுவதிலும் பயங்கரவாதத்தை அனுசரித்த  நிலையில், இந்த அப்பிள்களை அரசாங்கத்தால் வாங்குவதற்காக ஒரு பிரத்தியேக திட்டம் வகுக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டது. இது ஆரம்பிக்கப்பட்டு  5 மாதங்களுக்குள், இந்த ஆண்டு ஜனவரி இறுதி வரை, 70 கோடி ரூபா (சுமார் 10 மில்லியன் அமெரிக்க டொலர்) மதிப்புள்ள 15,000 மெட்ரிக் தொன் அப்பிள்கள் காஷ்மீர் விவசாயிகளிடமிருந்து நேரடியாக கொள்வனவு செய்யப்பட்டன. இந்த விவசாயிகளை சுட்டுக்கொல்வதிலும் அச்சுறுத்துவதிலும் பயங்கரவாதிகள் கவனம் செலுத்திய நிலையில் இந்த திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. இந்திய தேசியக்கொடிக்கும் உலகெங்கிலும் உள்ள நியாயமான சிந்தனையாளர்களுக்கும்  பிரகாசம் மற்றும் பெருமையை

வழங்குவதாக 1600 முதல் 1800 மீட்டர் வரை உயரத்தில் வளர்ந்த காஷ்மீரி குங்குமப்பூவுக்கு புவியியல் குறிச்சொல் வழங்கப்பட்டது.

முழு நாட்டினதும் உறுதிப்பாட்டை பிரதிபலிக்கும் வகையில், 36 மத்திய அமைச்சர்கள் யூனியன் பிரதேசத்தில் 50க்கும் மேற்பட்ட இடங்களுக்குச் சென்று நேரடியாக உண்மைகளைக் கேட்பதற்கும் பார்ப்பதற்கும் சந்தர்ப்பத்தை உருவாக்கியதுடன் 200க்கும் மேற்பட்ட திட்டங்களையும் தொடங்கிவைத்தனர். நகர்ப்புற மற்றும் கிராமப்புற உள்கட்டமைப்பின் நவீனமயமாக்கல், மின்சார வசதியை பிரபஞ்சமயமாக்கல், மற்றும் வெள்ளப் பெருக்கை எதிர்கொள்வதற்கான வலுவான திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. ஒரு இணைய ரீதீயான விவசாய சந்தை தளம் மற்றும் நாட்டின் முதல் குளிர்கால விளையாட்டுக்கள் கடந்த ஆண்டு ஜம்மு-காஷ்மீரில் நடத்தப்பட்டன.

கடந்த ஆண்டு நவம்பரில் தொடங்கப்பட்ட ஒரு தனித்துவமான திட்டம் “கிராமத்திற்குத் திரும்புதல்” , அரசாங்க அதிகாரிகள் யூனியன் பிரதேசத்தின் தொலைதூர பகுதிகளுக்கு சென்று, இரண்டு நாட்கள் மற்றும் ஒரு இரவை கழித்து அபிவிருத்தித் தேவைகளைப் பற்றி ஆய்வு செய்தமையை உறுதிப்படுத்தியது. இதன் விளைவாக, 20,000 க்கும் மேற்பட்ட வளர்ச்சிப் பணிகள் மக்களால் அடையாளம் காணப்பட்டன. இவற்றில், மூன்றில் ஒரு பங்கு (7000) ஏற்கனவே செயல்படுத்தப்பட்டுள்ளது.

இந்த முயற்சிகளை ஒருங்கிணைப்பதற்காக, அரசாங்க வேலைகளின் செயற்பாட்டில் உறுதியான நடவடிக்கை மற்றும் வெளிப்படைத்தன்மை ஆகியவை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. உலக புகழ்பெற்ற இந்திய தொழில்நுட்ப நிறுவனம் ஜம்மு-காஷ்மீரின் இறுதி ஆண்டு மாணவர்களுக்கு தொழில் பயிற்சிகளை வழங்க தீர்மானித்துள்ளது. அதே நேரத்தில், கண்டுபிடிப்பு, புத்தாக்கம், உருவகப்படுத்தல் மற்றும் பயிற்சிக்கான இரண்டு மையங்களை நிறுவியதன் மூலம் தொழில்களுக்கும் கல்வியாளர்களுக்கும் இடையிலான உள்முகம் பலப்படுத்தப்படவுள்ளது.

எதிர்காலம் பற்றி மேலும் நோக்கும்போது, உற்பத்தி ஆராய்ச்சி, மேம்பாடு மற்றும் சந்தைப்படுத்தல் ஆகியவற்றிற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட 12 ஆரம்ப நிலை நிறுவனங்களுக்கு உள்ளூர் அரசு 1.2 கோடி இந்திய ரூபாய் நிதி ஒதுக்கீட்டை அனுமதித்துள்ளது. ஜம்மு & ஸ்ரீநகரில் தலா ஒவ்வொரு தகவல் தொழில் நுட்ப பூங்காக்கள் விரைவில் அமைக்கப்படவுள்ளன. ஏழு தசாப்தங்களில் கல்வித் துறையில் மிகப்பெரிய நடவடிக்கையாக கருதப்படும் வகையில் 25,000 வெற்றிடங்களை கொண்ட 50 புதிய நிறுவனங்கள் நிறுவப்பட்டுள்ளன. 7,500 கோடி இந்திய ரூபாய் (1 பில்லியன் அமெரிக்க

டொலருக்கும் அதிகமான) பெறுமதியான, இரண்டு புதிய அகில இந்திய மருத்துவ அறிவியல் நிறுவனங்கள் (ஜம்முவில் உள்ள விஜய்பூர் மற்றும் காஷ்மீரில் அவந்திபோரா), ஏழு புதிய மருத்துவக் கல்லூரிகள், ஐந்து புதிய தாதியியல் கல்லூரிகள் மற்றும் ஒரு மாநில புற்றுநோய் நிறுவனம் ஆகியவை உட்பட புதிய சுகாதார உட்கட்டமைப்பு வசதிக்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

குறிப்பிடத்தக்க சாதனைகளின் மற்றொரு பகுதியாக உட்கட்டமைப்பு மேம்பாடு காணப்படுகிறது. பிரதமரின் அபிவிருத்தி திட்டங்களின் கீழ் பல்வேறு துறைகளில் உள்ள திட்டங்களுக்கான தடைகள் அகற்றப்பட்டுள்ளன. 7000 கோடி ரூபாய் மதிப்புள்ள 190 திட்டங்களுடன், ஜம்மு மற்றும் ஸ்ரீநகரை நவீன, நிலையான மற்றும் ஸ்மார்ட் நகரங்களாக இலகு ரெயில் திட்டம் போன்ற வசதிகளுடன் அபிவிருத்தி செய்வதே இதன் நோக்கம், இது வீட்டுவசதி, சேரிப்புற மேம்பாடு மற்றும் புனர்வாழ்வு , நகரங்கள் ஆகிய கொள்கைகளால் பூர்த்தி செய்யப்படும். ஜம்மு-காஷ்மீர் ஒருங்கிணைந்த சமூக பாதுகாப்பு திட்டத்தின் கீழ் திருநங்கைகள் முதன்முறையாக பயனாளிகளாக சேர்க்கப்பட்டனர். ஜம்மு-காஷ்மீர் "ஒரு நாடு ஒரு ரேஷன் அட்டை", (One nation one ration card scheme) திட்டத்தை அறிமுகப்படுத்துவதற்கான முதல் கட்டத்தை நிறைவு செய்தது.

சமூக-பொருளாதார வளர்ச்சியின் முன்னேற்றங்கள் நிர்வாக ஜனநாயகம் மற்றும் ஜம்மு-காஷ்மீர் மக்களின் பங்கேற்பு ஜனநாயகத்தின் அனைத்து முக்கிய பகுதிகளிலும் நேர்மையான நடவடிக்கைகளால் பொருந்தியுள்ளன.

முதன்முறையாக, பஞ்சாயத்து (நிர்வாகத்தின் மிகக் குறைந்த மட்டம்) நிறுவனங்களின் இரண்டாம் மட்டமான அபிவிருத்தி சபைகளைத் தடுப்பதற்கான தேர்தல்கள் கடந்த ஆண்டு ஒக்டோபரில் நடைபெற்றது. அவர்கள் முன்னொருபோதுமில்லாத வகையில் 98 வீதம் வாக்களித்தனர். பெண்கள், குழந்தைகள் மற்றும் சலுகை பெற்ற பிரிவுகளின் சமூக, பொருளாதார மற்றும் அரசியல் உரிமைகளைப் பாதுகாப்பதற்காகவும், வெளிப்படையான மற்றும் பொறுப்புணர்வுடன் கூடிய ஆட்சியை உறுதி செய்வதற்காகவும் உருவாக்கப்பட்டவை உட்பட அனைத்து மத்திய சட்டங்களும் இந்த யூனியன் பிரதேசத்திற்கு நீடிக்கப்பட்டுள்ளன.

பஞ்சாயத்துகளுக்கு ஆதரவாக, 1500 கோடி இந்திய ரூபாவுக்கு அதிகமான தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அத்துடன் குறைகளை நிவர்த்தி செய்வதை வலுப்படுத்த ஒவ்வொரு பஞ்சாயத்திலும் தகவல் பெட்டிகள் பொருத்தப்பட்டுள்ளன.

ஜம்மு-காஷ்மீர் யூனியன் பிரதேசம் இதுபோன்ற ஒரு சாத்தியமான சூழலில் பல சாதனைகளைச் செய்ததில் ஆச்சரியமில்லை.

கொவிட் தொற்றுநோய்க்கு எதிரான போராட்டம் போன்ற அச்சுறுத்தலானதாகவும் முன்னொருபோதுமில்லாத சவாலாக இருந்தாலும், ஜம்மு-காஷ்மீர் இந்தியாவில் சிறப்பாக செயல்படும் மாநிலங்கள் / யூனியன் பிரதேசங்களில் ஒன்றாகும், இந்தவிடயத்தில் அதிகாரமளிக்கும் கட்டமைப்பிற்கும் தேசிய வளங்களை அணுகுவதற்கும் நன்றியினை தெரிவிக்கவேண்டும். கொவிட் சோதனை விகிதம் தேசிய சராசரியை விட 4 மடங்கு அதிகமாக இங்கு பதிவாகியுள்ளது. கொவிட் -19க்கான பிரத்தியேக மருத்துவமனைகளை அமைத்த முதல் மாநிலங்கள் / யூனியன் பிரதேசங்களில் ஜம்மு-காஷ்மீரும் ஒன்றாகும். கொவிட்-19 ஐ சமாளிப்பதற்கான சிறந்த நடைமுறைகளுக்காக இந்தியாவில் தேர்ந்தெடுக்கப்பட்ட 16 மாவட்டங்களில் ஸ்ரீநகர் ஒன்றாக பதிவாகியுள்ளது.. சுற்றுலாத்துறை, வணிகம் மற்றும் கட்டுமானத் தொழிலாளர்களுக்கு உதவ மத்திய அரசு 350 கோடி இந்திய ரூபாய் (50 மில்லியன் அமெரிக்க டொலர்) நிவாரணப் பொதியை வழங்கியுள்ளது.

இந்த யூனியன் பிரதேச அரசாங்கமும் மக்களும் அவர்களின் புகழ்ச்சிகளால் ஓய்வெடுக்கப்போவதில்லை என்பதை கடந்த ஒரு வருடத்தின் அனுபவம் காண்பிக்கிறது. இந்தியாவின் எல்லைகள் முழுவதிலும் இருந்து தொடர்ந்து மேற்கொள்ளப்படும் எதிர்மறையான பிரசாரம் மற்றும் பயங்கரவாதத்திற்கு ஆதரவளிப்பதைப் பொருட்படுத்தாமல், இந்தியாவின் பிற பகுதிகளுடன் படிப்படியாக வளர்ச்சி, அமைதி மற்றும் செழிப்புக்கான பாதையில் அணிவகுத்துச் செல்வதற்கும், மற்ற இந்திய சகோதர சகோதரிகளுடன் தோளோடு தோள் கொடுப்பதற்கும் அவர்கள் உறுதியாக உள்ளனர்.

பாரிய வன்முறை மற்றும் பயங்கரவாத செயற்பாடுகளை திட்டமிடுவோரும் ஊக்குவிப்போரும், ஒருங்கிணைந்த மற்றும் சோடிக்கப்பட்ட கதைகளை கூறுபவர்களும் மக்களின் குரலுக்கு செவிசாய்க்கவும் கடினமான உண்மைகளைக் கேட்கவும், அவற்றைப் பிரதிபலிக்கும் தார்மீக தைரியத்தையும் கொண்டிருக்கவும் முடியுமானால் மாத்திரமே அவர்களின் சட்டவிரோதமானதும் பலவந்தமானதுமான ஆக்கிரமிப்பின் கீழ் உள்ள பிராந்தியங்களில் அவற்றை பிரதிபலிக்க முடியும்.

******

கொழும்பு
03 ஆகஸ்ட் 2020